சுருக்கம்

சிறப்புப் பொது விநியோகத்திட்டம் – துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ரவை மற்றும் மைதா ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் – தொடர்ந்து செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (டி1) துறை

அரசாணை (நிலை) எண்.266 நாள். 30.8.07.

படிக்க

1) அரசாணை (நிலை) எண். 106, கூ,உ, (ம) நு.பா. (டி1) துறை, நாள் 04–04–2007
2) அரசாணை (நிலை) எண். 141, கூ,உ, (ம) நு.பா. (டி1) துறை, நாள் 02–05–2007
3) அரசாணை (நிலை) எண் 201, கூ,உ, (ம) நு.பா. (டி1) துறை, நாள் 20–06–2007

-----

ஆணை

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, சமையல் எண்ணெய், ரவை மற்றும் மைதா ஆகியவைகளின் விலைகளை கட்டுப்படுத்த அரசு மேற்படி பொருட்களை கொள்முதல செய்து நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்து வருகிறது. இத்திட்டம் 14–04–2007 முதல் சென்னையிலும், பிற மாவட்டங்களில் மே, 2007 முதல் வாரத்திலிருந்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. இத்திட்டம் கடந்த மூன்று மாதங்களாக செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், வெளிச்சந்தையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் விலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடம் உள்ள ஆதரவினையும், வரும் பண்டிகை காலத்தில் இப்பொருட்களின் தேவைகளையும் கருத்தில்கொண்டு இத்திட்டத்தினை ஜனவரி, 2008 வரை தொடர்ந்து செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(1) ஒப்பந்தப்புள்ளி பெற்று, பத்தாயிரம் டன் துவரம் பருப்பினை இரண்டு தவணைகளாக, 5000 டன் வீதம் கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும்;
(2) ஒப்பந்தப்புள்ளி பெற்று, 5,000 டன் உளுத்தம் பருப்பினை கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட வேண்டும்;
(3) மேற்கூறிய இரு பருப்பு வகைகளையும் அவற்றின் நுகர்வினை கருத்தில்கொண்டு கொள்முதல் செய்யப்பட வேண்டும்;

(4) ஒரு லிட்டர் அளவு கொண்ட ஒரு கோடி பாக்கட் பாமாயில் கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட வேண்டும்;

(5) மத்திய அரசின் வெளிச்சந்தை கோதுமை வழங்கும் திட்டத்தின் கீழ் 10,000 மெட்ரிக் டன் (பத்தாயிரம்) கோதுமையை சிறப்பு ஒதுக்கீடாகப் பெற்று அதனை ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்களாக மாற்றி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும்;

(6) பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோதுமையின் ஒரு பகுதியை செறிவூட்டப்பட்ட (fortified) 'ஆட்டா' மாவாக மாற்றி பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும்;

3. இந்த சிறப்புப் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் விளைவாக வெளிச்சந்தையில் ஏற்படும் மாறுதல்களை கண்காணித்து, சிறப்புப் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்டும் பொருட்களின் விலையை அவ்வப்போது நிர்ணயிக்க கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவினை நியமித்து அரசு ஆணையிடுகிறது:-

(i) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர்;
(ii) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்;
(iii) நிதித் துறைச் செயலாளர்; மற்றும்
(iv) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

4. மேலே, பத்தி 2 மற்றும் 3–ல் கண்ட ஆணைகளை செயல்படுத்த உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் மற்றும் தமிழ்நாடு, நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மச்சேந்திரநாதன்
அரசுச் செயலாளர்.பெறுநர்

பெறுநர்
முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10,
மாநிலக் கணக்காயர், சென்னை–18. / சென்னை–18. (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை–18. / சென்னை–18. (பெயரில்)
சம்பளம் (ம) கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

<u>நகல்:</u>
நிதித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.